VLAMBARAM™ இலவசம்

# விளம்பரம்™

FREE ☎: 416 282-8059

மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை



வீடு விற்பது, வாங்குவது வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற

☎: (416) 491- 4002 / 287 - 2183

ராஜா எம். மகேந்திரன்
sales rep.

*நம்பிக்கை * நேர்மை * திறமை*



நதி VIII | JANUARY 15, 1998 | பாலம் 02



❊ 1998ல் வீட்டின் விலை ஏறுமா / இறங்குமா? (பக்கம் 8)

❊ தலையிடி, காய்ச்சலை தடுக்கலாமா ! (பக்கம் 4)

❊ 1997ம் ஆண்டில் நிகழ்ந்த விஞ்ஞான சாதனைகள் (பக்கம் 2)

❊ நிதியும் மூலதனவும் (பக்கம் 11)

❊ நடிகர் திலகத்தின் வரலாறு! (பக்கம் 7)

❊ நீதி வெண்பா / விண்வெளி (பக்கம் 6)

❊ நோயற்றவாழ்வு குறைவற்ற செல்வம் (பக்கம் 5 )


## தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்



Vlambaram Publications


**ELECTRICAL REPAIRS**

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ்-☎ 261-6883

**MOVING DELIVERY**

* FOR SMALL OR BIG MOVING
* REASONABLE RATES
* RELIABLE SERVICES

☎: (416) 286-7562

CELLULAR PHONE: 562-7977

**TUITION**

9ம் வகுப்பிலிருந்து 13ம் வகுப்பு வரையான மாணவர்களிற்கு விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்கள் வீட்டில் வந்து கற்பிப்பதற்கு அனுபவமிக்கவரான Baskarஐ நாட வேண்டியவர் பாஸ்கர் - (416) 269-9683

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12

Professional Photographer

தொடர்பு - கதிர்

☎: (416) 750-8118

2425 EGLINTON AV. E. UNIT 3
KENNEDY/ EGLINTON
SCARBOROUGH

**RAAJ WATCH WORK**

சகல விதமான மணிக்கூடுகளும் (Watch & Clock) குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாபனம்.

NATHAN ✆ (416) 265-5580
2885 LAWRENCE AVE. EAST
BRIMLY / LAWRENCE (Close to Biway)

**சகல ரக வீடியோக்களும் திருத்துமிடம்**

TV, VIDEO, MICROWAVE OVEN, REMOTE CONTROL, AMPLIFIER நியாயமான விலையில், தரமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.
(23 வருட அனுபவம்.)

கிருபானந்தராஜா (LONDON QUALIFIED)

TEL: 438-9134

**Tea Time**

24 Hours Coffee, Tea, Donuts & Our Foods

Kipling / Steeles சந்திப்பில் தமிழர் நிர்வாகத்தில் மேல்நாட்டு உணவு வகைகளுடன் எம்நாட்டு உணவு வகைகளும் 24 மணிநேரமு் பரிமாறப்படுகின்றது.

Special - Tea Time
String Hoppers -100
$8.49 (சொதி, சம்பலுடன்)

☎: (416) 745-0514

5010 Steeles Ave. W. Unit #4

**TUITION**

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDERGAR-DEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு Tution சொல்லிக் கொடுக்கப்படும்

PL. CALL: 755-8034

**PRIVATE TUITION**

PRIVATE TUITION
(UPTO OAC)
MATH, CALCULUS & CHEMISTRY
BY AN EXPERIENCED TEACHER

☎: (416) 447-6860

**PRIVATE TUITION**

ENGLISH / MATH
BY AN EXPERIENCED TEACHER
GRADE 3 TO GRADE 10

☎: (416) 447-6700

**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221

**SINGAPORE PAGING**



Motorola Brovo $39.00
(*Christmas Special)
MotorolaPronto $65.00

$5.95

சேவை மாதம் மட்டுமே $5.95

* 12 மாதங்களுக்கு முன் பணம் செலுத்த வேண்டும்
* Pagerஐ கொள்முதல் செய்ய வேண்டும்
* 3மாத குத்தகையும் உண்டு
* ஸ்காபரோவில் கிளைகளும் உண்டு

விபரங்களுக்கு : Raj
☎: (416) 745-2378

**சிவாகம கிரியா பீடம்**



☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் ஐயர்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978

# அறிவும் ஆக்கமும் (2) - விஜே குலதுங்கம்



கடந்த 1997ம் ஆண்டில் பல விஞ்ஞான செய்திகள் பிரபல்யமாக இருந்தது. அவற்றுள் சிலவற்றைப் பற்றி பார்ப்போம்.

சென்ற ஆண்டில் மிகவும் பிரப்ல்யமானதும் பலவிதமான சர்ச்சைகளையும் உலகம் பூராவும் ஏற்படுத்திய செய்தியானது *Cloning* எனப்படும் முறையால் உருவாக்கப்பட்ட *Dolly* எனப்படும் செம்மறியாட்டுக் குட்டி பற்றியதாகும். இச்செய்தியானது விஞ்ஞான உலகிலும், அரசியலிலும், சாதாரண மக்கள் இடையேயும் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. சாதாரணமாக ஒரு ஆண்கலமும், பெண்கலமும் சேர்ந்து தான் புதிய உயிர் உருவாகும். இன்னொரு விதத்தில் கூறப்போனால் ஒரு உயிர் உருவாவதற்கு ஆணும், பெண்ணும் தேவை. ஆனால் *Cloning* முறையில், ஆண்கலத்தின் தேவை இல்லாமல், பெண் முட்.டைக்கலத்தினுள் தாய் ஆட்டின் சாதாரண ஒரு கலத்திலுள்ள கருவைப் புகுத்தி அதை வளரச்செய்து அதன் மூலம் தாய் ஆட்டை அச்சொட்டாக ஒத்த ஒரு குட்டி ஆடு உருவாக்கப்பட்டது. இது ஒரு ரோஜாச் செடியில் இருந்து ஒரு தடியை வெட்டியெடுத்து, அதை நட்டு தாய்த் தாவரத்தை ஒத்த ஒரு செடியை உருவாக்குவதற்கு ஒத்ததாகும். இந்த விஞ்ஞான சாதனை இதுவரை காலமும் இருந்து வந்த இயற்கையின் நியதியை மாற்றி விட்டது.

இந்த முறை தற்போது மனிதரிலும் செய்யப்பட முடியும் என்றும் இதற்காக ஒரு வைத்தியசாலையையும் உருவாக்கப்போவதாக அமெரிக்க டாக்டர் ஒருவர் தெரிவித்து உள்ளார். இந்தமுறை மனிதரில் செய்யப்படுமாயின் பல நன்மைகளையும், அதே நேரத்தில் பல சர்ச்சைக்குரிய விளைவுகளையும் உண்டாக்கும்.

சென்ற ஆண்டு இடம்பெற்ற மற்றொரு சாதனை படைத்த விஞ்ஞான செய்தியானது,, PATHFINDER என்ற விண்கலம், செவ்வாய் கிரகத்தின் தரையில் இறங்கியது பற்றியதாகும். 1996ம் ஆண்டு மார்கழியில் அனுப்பப்பட்ட இந்த விண்கலம் பல இலட்சம் மைல்களை 6 மாத காலமாக பிரயாணம் செய்து, திட்டமிட்டபடி அமெரிக்க சுதந்திர தினமான *July* 4ம் திகதி செவ்வாய் கிரகத்தின் தரையில் ஓடித்திரிந்து பல்லாயிரக்கணக்கான புகைப்படங்களையும், பல விஞ்ஞானத் தகவல்களையும், மெரிக்காவின் NASA விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி வைத்தது. இந்தச் சிறிய மோட்டார் இரதம் எதிர்பார்த்ததை விட அதிக நாட்களுக்கு தொழிற்பட்டு சாதனையை நிகழ்த்தியது. இந்த PATHFINDER விண்வெளிச் சாதனை எதிர்காலத்தில் மனிதன் செவ்வாய் கிரகத்தில் காலடி வைக்கக்கூடிய சாத்தியகூறை ஏற்படுத்தி உள்ளது.

விண்வெளி ஆராய்ச்சியுடன் சம்பந்தப்பட்ட இன்னொரு செய்தியும் கடந்த வருடம் பிரபல்யமாக இருந்தது. மியர் (MIR) எனப்படும் ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் கடந்த 11 வருடங்களாக விண்வெளியில் இருந்த வருகின்றது. பல்வேறு கால கட்டத்தில் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் அங்கு சென்று தங்கியிருந்து ஆராய்ச்சிகளை நடத்தி வந்துள்ளார்கள். கடந்த வருடம் பொருட்களை ஏற்றிச் சென்ற விண்கலம் ஒன்று பொருட்களை இறக்குவதற்காக, இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துடன் இணைய முற்பட்ட பொழுது அத்துடன் தவறுதலாக மோதி சேதத்தை ஏற்படுத்தியது. இதனால் சக்திப் பற்றாக்குறை, போதியளவு காற்று இல்லாமை போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டது இதைத் திருத்துவதற்காக, பூமியிலிருந்து விண்கலம், விஞ்ஞானிகளுடன் அனுப்பப்பட்டு திருத்தப்பட்டது. இதன் பின்னரும் கணணியில் பிரச்சினை ஏற்பட்டு இயங்காமல் போய், பின்னர் சரிப்படுத்தப்பட்டது. பலதடவைகள் இப்படியாக உடைவதும், திருத்தப்படுவதுமாக இருந்தது. அமெரிக்கா கூட இதனுடைய பாதுகாப்பையும் வெற்றியையும் பற்றி சந்தேகத்தை கிளப்பியது. ஆயினும் எல்லாப் பிரச்சனைகளுக்கு தற்போது நீக்கப்பட்டு வெற்றிகரமாக 1998ம் ஆண்டிலும் தன் சேவையை தொடர்கின்றது.

*EL Nino* எனப்படுவது ஒரு பருவகாலத்தில் *Peru* நாட்டின் வடக்குக் கரையோரமாக தோன்றுகின்ற ஒரு கடல் சுழி (*Ocean Current*) ஆகும். இது வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களுடன் மிகவும் தொடர்புடையது. 150 வருடங்களில் கடந்த வருடம்தான் இதன் தாக்கம் மிகவும் மோசமாக இருந்தது. இது கனடாவிற்கு நல்ல சேதியாக இருந்தது. இதனால்தான் கனடாவின் குளிர்காலம் இம்முறை தாக்கம் குறைந்ததாக காணப்பட்டது. இந்த *EL Nino* வின் விளைவு இந்தோனேசியா (*Indonesia*)வில் ஏற்பட்ட வறட்சி, அவுஸ்திரேலியா (*Australia*)வில் ஏற்பட்ட தீ, கலிபோர்ணியா (*California*)வில் ஏற்பட்ட மழை வீழ்ச்சி போன்றவையாகும். 1997ம் ஆண்டே ஆகக் கூடிய வெப்பம் நிறைந்த ஆண்டாக கருதப்படுகின்றது. இதையொட்டி உலக வெப்பநிலை ஏற்றம் (*Global Warming*) என்பது பற்றி, ஜப்பான் நாட்டிலுள்ள *Kyoto* என்னும் நகரில் ஒரு சர்வதேச கருத்தரங்கு நடைபெற்று, எப்படி இந்த உலக வெப்பநிலை ஏற்றத்தை தடுக்கலாம் என ஆராயப்பட்டது. இதன் மூலம் ஒரு சர்வதேச ரீதியில் ஒரு உடன்பாடும் கைச்சாத்திடப்பட்டது. ஆயினும் எவ்வளவு தூரம் பல்வேறு நாடுகள் இதை கடைப்பிடிக்கும் என்பது கேள்விக்குறியாகும். ஏனெனில் இன்னும் கூட பலர் இந்த Global Warming ஐப் பற்றி அலட்டிக் கொள்ளாது, கவலைப்படாது உள்ளார்கள். இதைப்பற்றி விரிவாக இன்னொரு சந்தர்ப்பத்தில் எப்படி இது தோன்றுகின்றது, எப்படி இதைக்கட்டுப்படுத்தலாம் என்பது பற்றிப் பார்ப்போம்.


புதிய நிர்வாகத்தின் கீழ்

Markham / Sheppard பகுதியில்

NEW SPICELAND

☎ : 292-0086


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 80

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | | 3 |
| | ■ | | ■ | | ■ | ■ | |
| 4 | | | | | | ■ | |
| | ■ | | ■ | 5 | ■ | ■ | |
| | ■ | ■ | | ■ | 6 | 7 | |
| ■ | ■ | 8 | 9 | | ■ | | ■ |
| | ■ | | ■ | | ■ | | 10 |
| 11 | | | | 12 | | | ■ |

**இடமிருந்து - வலம்**

1. கோபத்திற்கு பேர் போன முனிவர்
3. இராவணனின் கொடியில் இருப்பது (வல - இட)
4. ஆயுதம்
6. அழகன்
8. பக்குவம்
10. நித்திரையில் வருவது (வல - இட)
11. தடைப் பொருள்

**மேலிருந்து கீழ்**

1. சுத்தம்
2. வழக்கம்
3. இந்தியாவின் சந்தனக்கட்டை கடத்தல்காரன்
5. பாட்டு இயற்றுபவர் (கீழ்-மேல்)
7. பனை மட்டையில் இருப்பது
8. பூச்சியில் இருந்து பெறப்படும் துணி
9. குறை (கீழ் - மேல்)
11. இளஞ் செடி (கீழ் - மேல்)
12. ஓர் இசைக்கருவி (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் January 28, 98க்கு முன்னர் கிடைக்க வேண்டும். Address: P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச | கு | ந் | த | லை | ■ | ஓ | ம் |
| ஞ் | ■ | ■ | ட் | ■ | ப | ■ | ர |
| சா | க் | க | டை | ■ | கை | ங் | க |
| ர | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | க் |
| ம் | ட | கு | ■ | ம் | க | ங் | ச |
| ■ | ■ | க் | ■ | ன | ■ | ■ | ■ |
| ரி | ■ | ரு | ■ | த | க | வ | ல் |
| அ | ர | சு | மா | வே | ல் | ■ | மா |

**#79இல் வெற்றி பெற்றோர்**

1) N. Ragunathan, Donmills
2) சிந்துஜா N., Toronto


நியூ ஸ்பைஸ்லாண்ட்
5800 Sheppard Ave. E.
Unit#16 Scarborough, Ont.



HERITAGE SCHOLARSHIP TRUST PLAN

வேலை வாய்ப்பு!

விற்பனையாளர்

* முழு நேரம் அல்லது பகுதி நேர வெற்றிடங்கள் உள்ளன.
* தேர்வடைந்த முழு நேர விண்ணப்பதாரருக்கு மாத சம்பளமும் அதிகப்படி இனாமும் வழங்கப்படும். ஆங்கில அறிவு அவசியம் முன் அனுபவம் தேவையில்லை.
* இலவச பயிற்சியின் போது ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: திருமதி. தேவி ராஜா (இயக்குனர்)
தொலைபேசி இல: (416) 298-7377 Ext. 135
அல்லது: (416) 756-3409



கலைமகள் புத்தக நிலையம்

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

595 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 944-1818

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319


துரித பணமாற்றுச் சேவை

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing








**Repairs**
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] 285-4998

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** ( MIDLAND & LAWRENCE )



## TECHNOS AUTOMOTIVE INC.
## AUTO REPAIR CENTRE

- Vehicle Certification
- Mechanical & Electrical repairs for all domest and import vehicles.
- Computer diagnosis on fuel injection and electronicignition system.
- Specializing in Volvo &Hyundai
- Tire repairs & Wheel balancing
- Free Inspection and proper advise

* வாகன சேட்டிபிக்கேஷன்
* வாகனங்களுக்கான சகல விதமான இயந்திர,மின்சார திருத்த வேலைகள்
* கொம்பியூட்டர் வசதியுடன் திருத்தவேலைகள்
* ரயர் திருத்த வேலைகள்
* வீல் பலன்சிங்
* இலவச பரிசோதனையுடன் முறையான ஆலோசனைகள் வழங்கப்படும்

1253 KENNEDY RD.
ELLESMERE / LAWRENCE
SCARBOROUGH

☎ : (416) 285-8066

உங்கள் வாகனங்களின் சகல விதமான திருத்தவேலைகளும் குறைந்த செலவில் சிறந்த தரத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

✿ **Oil & Filter Change With CASTROL OIL GTX**
**5L** (Upto 5Lt.)

"YOUR SATISFACTION IS OUR BUSINESS"


<u>*திருக்குறளும் விளக்கமும்*</u>

**278. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி**
**மறைந்தொழுகு மாந்தர் பலர்.**
நீருக்குள் மூழ்கியோர் தம்மை மறைத்துக் கொள்வது போல, மாண்புடையோர் எனும் பெயருக்குள் தம்மை மறைத்துக்கொண்டு மனத்தில் மாசுடையோர் பலர் உலவுகின்றனர்.

**279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன**
**வினைபடு பாலர் கொளல்.**
நேராகத் தோன்றும் அம்பு, கொலைச் செயல் புரியும் வளைந்து தோன்றும் யாழ், இசை இன்பம் பயக்கும். அது


*We are entering 7 th year service in Scarborough.*



## Better Work ... Less Money

# N.T.E Auto Inc.
New Trade Engineering

We service
EUROPEAN , JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.


**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**

We will reduce the worry and expense of maintaining your car by offering:
- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

என். ரி. ஈ. ஒட்டோ இங்.

**NTE AUTO INC.**
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎ (416) 750 - 1573
SIVABALAN






# Pillayar Traders

**SRILANKAN . EAST & WEST INDIAN**
GROCERIES & TEXTTILES
**3630 LAWRENCE AV. E., SCARBORO**
☎ : 438-7746


## விஷேச போட்டி இல. 70

1. நீள அளவைக் குறிக்கும் பிரித்தானிய அலகில் 4ஐ தருக
2. நீள அளவைக்குறிக்கும் சர்வதேச அலகில் 4ஐ தருக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யா | செ | அ | ம் | ல | கு | ங் | அ |
| ர் | ன் | க | நி | மி | ட | ம் | டி |
| அ | ரி | ல | மீ | ற் | ற | ர் | ப |
| ப | மீ | ம் | க | ன | ம் | தொ | ன் |
| ர் | ற் | கி | லோ | மீ | ற் | ற | ர் |
| லா | ற | ப | ர | ப் | பு | நா | ள் |
| ங் | ர் | ற | ற் | மீ | லி | ல் | மி |
| கு | அ | டி | ச | து | ர | ல் | மை |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை February 11, 98 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

<u>**# 69ன் விடைகள்**</u>

1 - கடதாசி, 2 -பருத்தி, 4-பூக்கள், 5-மரம், 7-செப்பு, 8-வெண்கலம், 10-அலுமீனியம், 11-இரும்பு, 12-பட்டு, 13-லேஸ், 25-வெள்ளி, 30-முத்து, 35-பவளம், 40-சிவப்புக்கல், 50-பொன், 55 -பச்சைக்கல், 60--வைரம்

**பரிசு பெற்றோர்:**
1) Mrs. Srivathy Sivayogan, NorthYork
2) Mrs. P. Subramaniam, NorhtYork


**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)

**விதிகள்:** ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம்.பிள்ளையார் ரேடர்ஸ்,விளம்பரம் ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.

# ஆரோக்கிய வாழ்வு (2) - N. செல்வசோதி



## சர்வாங்க ஆசனம் (Sarvangasan) - Shoulder stand



ஆசனங்களில் சிறந்தது. உடலின் அனைத்துப் பாகங்களுக்கும் சிறப்பான பலன்களைக் கொடுக்கிறது. இதனால் சர்வாங்க ஆசனமென்று அழைக்கப்படுகிறது.

செய்முறை
1. முதலில் தரையில் நிமிர்ந்த நிலையில் படுத்துக்கொள்ள வேண்டும்
2. இரண்டு கால்களையும் சேர்த்தபடி மேல் நோக்கித் தூக்கவேண்டும்.
3. கைகள் இரண்டையும் இடுப்பிலிருந்து எடுத்து முதுகுக்கு முட்டுக் கொடுக்க வேண்டும்.
4. படத்தில் உள்ளபடி எல்லா அங்கங்களையும் நேர் கோட்டில் நிறுத்தவேண்டும்.

இப்போது ஆசனம் முழுநிலை அடைந்துவிட்டது. இந்த நிலையில் மூன்று முதல் ஐந்து நிமிடங்கள் நிற்கப் பழகவேண்டும்.

கவனிக்க வேண்டியது ஆசன நிலையில் முதுகு வளையாமல் இருப்பதற்கு முதுகுப் பகுதியில் கைகொண்டு அழுத்த வேண்டும். அத்துடன் சுவாசமானது சாதாரண முறையில் நடைபெற வேண்டும்.

பலன்கள்
1. உடலின் சகல உறுப்புகளிலுமுள்ள வாதங்களும் நோவுகளும் நீங்குகின்றது.
2. அடிவயிறு உறுப்புகள், இதயம், மூளை, முகம் போன்ற பகுதிகளில் இரத்த ஓட்டம் சீராக நடைபெறுவதால் முகம் பொலிவு பெறுகிறது.
3. உடலின் மேலதிகமான எடையைக் குறைத்துக் கொள்வதற்கு அற்புதமான மருந்தாக இந்த ஆசனம் அமைகிறது.
4. மலட்டுத் தன்மையை நீக்குவதுடன் ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்கிறது.
5. இதனைத் தொடர்ந்து செய்வதால் காய்ச்சல், பீனிசம் போன்ற நோய்கள் வராமல் தடுக்க முடிகிறது.

(தொடரும்)

## மருத்துவம் காய்ச்சல், தலைவலி, வயிற்றுவலி வராமல் தடுக்கும் வழிவகைகள்

காய்ச்சல், தலைவலி, வயிற்றுவலி என்பனவற்றால் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான மக்கள் தம் வாழ்நாளில் பெரும்பகுதி காலத்தை மனச் சோர்வுடன் மகிழ்ச்சியின்றிக் கடத்திச் செல்வதை அன்றாடம் காணுகின்றோம்.

மேற்குறிப்பிட்ட நோய்களைக் குணப்படுத்துவதற்கு நூற்றுக்கணக்கான மருந்துகளும் மாத்திரைகளும் இருக்கின்றதே தவிர இந் நோய்களை வராமல் முன்கூட்டியே தடுக்க எந்த விதமான மருந்து வகைகளேனும் நம்மிடம் கிடையாது. எந்த டாக்கராலும் இதற்குரிய ஆலோசனை வழங்கப்படுவதில்லை. இந்நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலானோர் மருந்து மாத்திரைகளை அதிகமாக உட்கொண்ட போதும் நோய் குணப்படும் தன்மை குறைந்தே காணப்படுகிறது. இப்படிப்ப நோய்களிலிருந்து விடுபடுவதற்கு சில எளிய வழிமுறைகள் சித்தர்கள் கண்ட விஞ்ஞானத்தில், தத்துவத்தில் சொல்லப்படுகிறது.

மூன்று வியாதிகளும் நிச்சயம் வராது.
1. பிறந்தது முதல் இரண்டு வயதுக் குழந்தைவரை தினமும் காலையில் இளஞ்சூடுள்ள நீரை ஒரு தேனீர் கோப்பைவரை வெறும் வயிற்றில் குழந்தைக்கு கொடுத்து விடவேண்டும். அத்துடன் காலையிலும், மாலையிலும் இளஞ்சூடுள்ள சூரிய ஒளியில் முடிந்தவரை உடல் முழுவதும் படும்படி சற்று நேரம் நிறுத்தி வைக்க வேண்டும். இவ்வாறு சில தினங்கள் செய்துவரும் போது அவர்களுக்குக் காய்ச்சலோ வயிற்றுவலியோ வராமலிருப்பதைக் காணமுடியும்.
2. இரண்டு முதல் ஐந்து வயதுவரை அவர்கள் குடிக்கும் அளவுவரை வெந்நீர் கொடுக்க வேண்டும்.
3. 6 முதல் 15 வயதுவரை அரை லீட்டர் வெந்நீர் வரை கொடுக்க வேண்டும். மேலும் காலையில் அவர்களால் முடிந்த யோகாசனங்கள் 10 நிமிடம் வரை செய்யப் பழக்க வேண்டும். அத்துடன் இரவு உணவை இலேசான உணவாகவும், அதனை மாலை 6 மணிக்கு முன்பாகக் கொடுத்து விடவேண்டும். இதனால் அவர்களுக்கு மேற்கண்ட மூன்று வியாதிகளும் நிச்சயம் வராது.

15 வயதிற்கு மேற்பட்டவர்கள் காலையில் ஒன்றரை லீட்டர் குளிர்நீர் குடிக்க வேண்டும். பின்பு நன்றாகக் குனிந்து கொண்டு வாயால் முடிந்த அளவு, வெளியே எடு விட வேண்டும். இதனுடன் சேர்ந்து வயிற்றில் உண்டாகும் அமிலங்கள் காலையில் வெளியில் வந்துவிடுகிறது. இந்த முறையால் காய்ச்சல் மண்டைவலி, வயிற்று வராமல் தடுக்க முடியும். அத்துடன் உணவு முறையிலும் சற்று மாறுதலைக் கடைப்பிடிக்க வேண்டும். விரைவில் ஜீரணமாகக்கூடிய இயற்கை உணவுகளை முடிந்த அளவு அவரவர் வயது, சரீர அமைப்பு முதலியவற்றைக் கருத்திற்க் கொண்டு உண்ணப் பழகிக்கொள்ள வேண்டும். அத்துடன் சர்வாங்க ஆசனம் முதலிய சில எ யோகாசனப் பயிற்சிகளையும் செய்துவருதல் மிகவும் சிறப்பான பலன்களைக் கொடுக்கும்.

நன்றி (யோகக்க


Neelam SILK

வட அமெரிக்காவில் உயர்ந்தரகப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

நீலம் சில்க்

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 6வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும்

நீலம் சில்க்கின் 1998ம் ஆண்டிற்கான

புதிய வருகைகள்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)



IMMIGRATION CONSULTAN
Christina Staden, M.A.
Member of the Association of Immigration Counsel of Ca
18 years experience
Free assessment, LOW COST
money back guarantee*
Tel. Toronto (416) 222-5254 Mississauga (905) 501-0
9AM.-9P.M.



YARLCAN
STEAM CLEANIN





Tel: (416) 724-9085 / Pager : 600 0335 / Cell: 315 0


"மோனோலிஸா ஓவியம் -
புன்னகை ஓவியம் என்று இதனைக் கூறுவர். கிட்டத்தட்ட 4 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்டது. இந்த ஓவியத்தின் உ 30 அங்குலம், அகலம் 21 அங்குலம் ஆகும்.

# நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் (2) -M. உமா

## ஆரோக்கிய உணவுமுறை (EATING RIGHT)

<u>எமது உணவுகளில் காணப்படும் அடிப்படை சத்துக்கள்</u> (சென்ற இதழ் தொடர்ச்சி)

**4. உயிர்ச்சத்துக்கள் ( Vitamins )**
இவை உடலின் தொழிற்பாட்டிற்கும், ஆரோக்கிய உடலிற்கும் இன்றியமையாததாகும். இதில் பலவகைகள் உண்டு.

<u>உயிர்ச்சத்து A (Vitamin A)</u> பொதுவாக பால், முட்டை மஞ்சள் கரு, கீரை வகை, கரட் தோடம்பழம், மீன் என்பனவற்றில் அதிகமாக காணப்படுகிறது.
இதன் பற்றாக்குறையால் கண் வியாதிகள், தோல் வியாதிகள் சிறுவர்களின் வளர்ச்சியில் பாதிப்பு என்பன ஏற்படலாம்.

<u>உயிர்ச்சத்து B (Vitamin B)</u> இது பொதுவாக பால், மீன், இலைக்கறி வகைகள் (Leafy Vegetable), பருப்பு வகை, தோடம்பழம், தவிட்டரிசி என்பனவற்றில் அதிகமாக காணப்படுகிறது. இதன் பற்றாக்குறையால் மலச்சிக்கல், நரம்பு வியாதிகள், குருதி சோகை (Anemia) போன்ற நோய்கள் ஏற்படலாம்.

<u>உயிர்ச்சத்து C (Vitamin C)</u> இது பொதுவாக பழவகைகளிலும் மரக்கறி வகைகளிகும் அதிகமாக காணப்படுகிறது.
ஆராய்ச்சிகளின் படி உயிர்ச்சத்து Cஆனது பலவகையான புற்று நோய்கள் உருவாகும் சந்தர்ப்பத்தை குறைக்கின்றது. அத்துடன் தடிமன் (Common Cold) வியாதிகளை குறைப்பதற்கும் இது உதவுகிறது.

<u>உயிர்ச்சத்து D (Vitamin D)</u> இது பொதுவாக மீன் எண்ணெய் (Cod-Diver Oil), பால், முட்டைகளில் அதிகமாக காணப்படுகிறது. இது எலும்புகளினதும், பற்களினதும் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதனவாகும்.
உயிர் சத்து E(Vitamin E) இது பொதுவாக தாவர எண்ணெய் (Vegetable Oil), பச்சை இலைக்கறி வகைகளிலும் அதிகமாக காணப்படுகிறது. இது தோலின் (Skin) ஆரோக்கியத்திற்கு உதவுவதாக நம்பப்படுகிறது.

<u>உயிர்ச்சத்து K ( Vitamin K)</u> இது பொதுவாக பச்சை இலைக்கறி வகைகள், மீன், ஈரல் என்பவற்றில் அதிகமாக காணப்படுகிறது. இது குருதி உறைதலிற்கு (Clod Clotting) உதவி செய்கிறது.

<u>தாதுப்பொருட்கள் ( Minerals )</u> இவற்றில் பலவகையான உடலிற்கு தேவைப்படுகிறது. அவற்றில் சில
* இரும்பு (Fe) - பொதுவாக இது மீன், இறைச்சி, பச்சை இலைக் காய்கறிகள் என்பனவற்றில் அதிகமாக காணப்படுகிறது. இவை செங்குருதி கலன்களின் ஆக்கத்திற்கு பெரும் பங்கை வகிக்கிறது. இதன் குறைபாட்டினால் குருதிச் சோகை (Anemia) நோய் ஏற்படுகிறது.
* கல்சியம் (Ca) இது பொதுவாக பால், பாலில் இருந்து தயாரிக்கும் உணவு (Cheese, Yogurt) என்பனவற்றில் அதிகமாக காணப்படுகிறது. இது பல், எலும்பு என்பனவற்றின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. தற்போதைய ஆராய்ச்சிகளின்படி, கல்சியம் எலும்பு அரிப்பு (Osteoporosis) என்னும் நோயை தடுக்க வல்லது.

( தொடரும்..... )

# திருமணம் - ஆண்டு விழாக்கள்



வாழ்க்கையில் பரிசளிப்பு, உபகாரம் என்பது தமிழர் பண்பாட்டில் சேர்ந்தே வந்துள்ளது. இந்த முறை தமிழர் கலாச்சாரத்தில் மட்டுமன்றி எல்லாச் சமுதாயத்திலும் இருக்கின்றது.
உதாரணமாக திருமணத்திற்குரிய ஆண்டு விழாக்களிற்கு வெவ்வேறு ஆண்டுகளிற்கு ஏற்ப வெவ்வேறு பரிசுகளை வழங்கி குடும்பத்தினரை வாழ்த்துகிறார்கள். நீண்ட காலம் தம்பதிகள் வாழ்ந்தால் அவர்களின் பெருமையை காட்டிக்கொள்வதற்காக சிறந்த பரிசில்களை வழங்குவது முறையாக இருந்து வருகிறது. இதுவரை மனிதர்கள் வாழ்ந்த காலத்தை அவதானிக்கும் போது கணக்குகளின் எண்ணிக்கையின் படி 120 வருடங்கள் தான் மக்கள் வாழ்ந்த ஆகக்கூடிய காலமாகும். இப்பொழுது ஆகக்கூடியதாக வாழும் பெண் கனடாவில் இருக்கிறார். அவரிற்கு இப்பொழுது வயது 117 ஆகும். ஆனாலும் அப் பெண்ணும் தம்பதிகளாக சேர்ந்து வாழ்ந்த ஆகக்கூடிய காலம் 75 வருடங்களிற்கு குறைவாகத் தான் இருக்கின்றது. இதனால் ஒரு தம்பதி 60 வருடம் அல்லது 75 வருடங்கள் வாழ்ந்திருந்தால் அவர்களிற்கு Diamond கொடுத்து வாழ்த்துகிறார்கள்.
இப்பரிசுகள் கொடுத்து தம்பதிகளை வாழ்த்தும் முறை நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வருகின்றது. இதனை (Traditional) பாரம்பரிய முறை என்பார்கள். இதே முறை காலத்துடன் மருபுபட்டு இன்று புதியமுறை என்று (Modern) கொடுக்கப்படும் பரிசுப்பொருட்கள் மாற்றம் அடையாது வருகின்றன.
கீழுள்ள பட்டியலில் ஒரு தம்பதிக்கு 1 வது திருமண ஆண்டு விழாவிலிருந்து 75 வது திருமண ஆண்டு விழாவரை பரிசில்கள் பாரம்பரிய முறையிலும், புதியமுறையில் கொடுக்கப்படும் பொருட்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

## Wedding anniversary symbols

| Year | Traditional | Modern | Year | Traditional | Modern |
|---|---|---|---|---|---|
| 1st. | Paper | Clocks | 14th | Ivory | Gold Jewelry |
| 2nd. | Cotton | China | 15th | Crystal | Watches |
| 3rd | Leather | Crystal, Glass | 20th | China | Platinum |
| 4th | Flowers | Electric Appliances | 25th | Silver | Silver |
| 5th | Wood | Silverware | 30th | Pearl | Diamond |
| 6th | Candy, Iron | Wood | 35th | Coral | Jade |
| 7th | Copper, Wool | Desk Sets | 40th | Ruby | Ruby |
| 8th | Bronze, Pottery | Linens | 45th | Sapphire | Sapphire |
| 9th | Pottery, Willow | Leather | 50th | Gold | Gold |
| 10th | Tin, Aluminum | Diamond Jewelry | 55th | Emerald | Emerald |
| 11th | Steel | Fashion Jewelry | 60th | Diamond | Diamond |
| 12th | Silk, Linen | Pearl | 75th | Diamond | Diamond |
| 13th | Lace | Textiles, Furs | | | |


TAMIL INSURANCE CLAIMS CONSULTANT
"தமிழில் இலவச ஆலோசனை"

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்

ரவி நடராஜா



※ தகுந்த ஆலோசனை
※ சட்ட உரிமைகள்
※ விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
※ உரிய நஷ்டஈடு ※ மற்றைய இழப்பீடு
※ மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும்,
அறிவுரைகளுமதமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 231-5134
FAX: (416) 231-7433



நான் ஒரு வழக்கறிஞர் இல்லை.



குடிவரவு சட்டம் IMMIGRATION LAW
* அகதி நிலை விண்ணப்பம்
* மேன்முறையீடு
* ஸ்பொன்சர்

குற்றவியல் சட்டம் CRIMINAL LAW
விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ACCIDENT VICTIMS

ஆகியவற்றில் அனுபவமுள்ள வழக்கறிஞர்களுடன் மொழிபெயர்ப்பாளராகவும், உதவியாளராகவும் தொழில்புரிகின்றேன்.
உங்களுக்குத் தேவையான சட்டசம்பந்தமான உதவிகளுக்கு



தொடர்பு கொள்ளுங்கள்....> எஸ்.கே. தீசன் (416) 631-6322





LOW COST CARPET
& Interior's Warehouse


உரிமையாளர்: சபேசன் காங்கேசு

☎: (416) 605-1990
721A Progress Ave., Scarborough, Ont.









* தரமான நிலப்படுக்கைகள் (Carpet, Hardwood Floor, Parquet Floor)
* சாளரங்களின் மறைவுச் சேலைகள் (Window Coverings, Blinds, Valance, Vertical blinds)
* வீட்டுத் தேவைகளிற்கான சாதனங்கள் (Fridge, Stove, Washer & Dryer, Dish washer)
* மற்றும் சகலவிதமான தளபாடங்களும் (Furnitures)

நீண்டகாலமாக மக்களின் தேவைக்கேற்ப விற்பனை செய்வதில் முன்னணியில் நிற்கும் நிறுவனம் LOW COST

## சாணக்கிய நீதி வெண்பா

1. நாக்கு நுனிக்கண் நறுந்தேனும் நெஞ்சுகத்து நீக்கரிய நஞ்சும் நிலைபெற்ற தீக்குத்தோன்
இன் சொல் உரைக்கின்றான் என்றவனை நம்பாதே என் சொலினும் செய்வானிடர்.

தீய எண்ணத்தைக் கொண்ட ஒருவன் கதைக்கும் போது நாக்கிலே தேன் கலந்தது போல் இனிமையாகப் பேசுவான். அப்படிப் புறத்தே இனிமையாகப் பேசுபவன் அகத்தே தீய எண்ணத்தைக் கொண்டிருப்பான். அப்படி அகத்தே தீய எண்ணத்தைக் கொண்டவன் நல்ல தீங்கில்லாத சொற்களைக் கூறுகின்றான் என்று நம்பிவிடாதே. அதன்படி அவன் கூறினாலும் அவன் தீங்கையே செய்வான். (இதை உணர்ந்து கொள்)

2. வட்டிக்கடனும் வளர் நெருப்பும் வெம்பிணியும் கட்டழித்தல் வேண்டும் களைந்து குறை
விட்டதுண்டேல் தொடர்ந்து முழுதழிக்கும் அம்மா தடுத்தலரிது.

அதாவது ஒருவரிடம் வட்டிக்காக வாங்கிய பணத்தை வட்டியும் முதலுமாகக் கொடுத்துத் தீர்த்து விடவேண்டும். இல்லையேல் வட்டிக்கு வாங்கிய பணத்திற்குக் கட்ட வேண்டிய வட்டியும் சேர்ந்தால் பின்பு அதற்கும் சேர்த்து வட்டி கட்ட நேரிடும். அதேபோல் ஓரிடத்தில் தீ பிடித்து எரியும்போது அந்தத் தீயை முற்றாக அணைத்து விடவேண்டும. அதனை முற்றாக அழிக்காது விட்டால் அது திரும்பவும் எரியத் தொடங்கி யாவற்றையும் அழித்துவிடும். கொடிய நோயும் அப்படித்தான் நோயை முற்றாகக் குணப்படுத்த வேண்டும். அப்படி முற்றாகக் குணப்படுத்தாமல் விட்டால் அது மிகையாகி ஒருவரது வாழ்வையே அழித்துவிடும். இவற்றை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. எனவே எந்தத் தீய சக்திகளையும் ஒருவன் முற்றாக முற்றாக அழித்து விடவேண்டும். அதிலே குறைவிட்டால் அது திரும்பவும் வளர்ந்து அவனை இழிநிலைக்குத் தள்ளும்.

-மணி-


## விண்வெளி

அறிமுகம் தருபவர் : கனி

எதற்குமே ஒரு அறிமுகம் தேவையாகிவிட்டது. எனவே இப்பகுதியிற்கும் ஒரு அறிமுகத்தைக் கொடுப்போம். எந்த ஒரி விஞ்ஞானம் ஆயினும் சரி அல்லது மெஞ்ஞானம் ஆயினும் சரி இந்தப் பிரபஞ்சத்துள் அடக்கம். எனவே எனது அறிமுகத்திற்கும் இப் பிரபஞ்சத்தையே எடுத்துக் கொண்டேன்.

மெய்ஞ்ஞானவாதிகள், அவர்கள் எம்மதத்தவர்கள் ஆயினும் தமது கொள்கைகள், தார்ப்பரியங்கள் எல்லாாவற்றையும் இப்பிரபஞ்சத் தத்துவத்துள் அடக்கி விடுவார்கள். விஞ்ஞான வாதிகளும் தங்களது கண்டுபிடிப்புக்கள், விளக்கங்கள் எனன்பவற்றிற்கு பிரபஞ்சத்தையே ஆதாரமாகக் கூறுவார்கள். சில சமயங்களில் விஞ்ஞானம், மெஞ்ஞானம் இரண்டுமே முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருப்பினும் இரண்டுக்குமே ஆதாரம் இப்பிரபஞ்சம் தான் என்பதில் ஐயமில்லை. இப் பிரபஞ்சத்தின் துணை கொண்டு வான்வெளியை விஞ்ஞான ரீதியில் தான் விளக்கப் பார்க்கிறேன்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)




* எமது
இலவச பரிசு
திட்டங்களை
பற்றிய
மேலதிக
தகவல்களை
விற்பனையா
ளர்களிடம்
பெற்றுக்
கொள்ளவும்

22 Melham Road, Unit #1 Scarborough, Ont. Tel: (416) 299-4202





# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

-வீணை மைந்தன்

# நான் வாழப் போகிறேன் (2)

*(சென்றஇதழ் தொடர்ச்சி)*

நடிப்பு நாடகம் உள்ளத்தில் பதிந்த முதல் விதையாகி அதுவே வித்தையாகி முளைவிடத் தோன்றிய காலம் அது!

நடிப்பின் மேல் உள்ள காதலால் நாடகக் குழுவுடன் திடீரெனக் காணாமல் போவதும் பின் வீட்டுக்கு அழைத்து வருவதுமாக நாட்கள் உருளத் தொடங்கின. ஒரு நாள் தனது தாயாரிடம் வந்து ஒரு வேண்டுகோள் விடுத்தான் அச் சிறுவன்! பெற்ற தாயோ ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்துப் பிரமித்து நின்றாள்! வியப்புற்றாள்! அது என்ன?

சுவடு - 2

"ராஜாமணி எனும் அன்னை முகத்தில் நலம்பெற விளங்கும் குங்குமம்!
நற்குலமாதர் கற்பினைப் போற்றி நாட்டினர் வணங்கும் குங்குமம்!

என்று அன்னை ராஜாமணி அம்மையாரின் நெற்றியில் திகழும் குங்குமத் திலகத்தின் பெருமையைக் கவியரசு கண்ணதாசன் அவர்கள் குங்கும் திரைப்படப் பாடலில் அழகாகப் போற்றிப்பாடியுள்ளார். ஒரு குடும்பத் தலைவியின் நெற்றியில் திகழும் குங்குமம் இல்வாழ்வு நலம் பெற விளங்கும் திலகமாகத் திகழ வேண்டும் என்பதற்கு உதாரணத் தலைவியாக வாழ்ந்து காட்டியவர் எமது நாயகனின் அன்னையார் திருமதி ராஜாமணி அம்மையார் அவர்கள்.

அப்போது அவருக்கு இருபத்தியாறு வயது. வாழ்வின் வசந்த காலச் சுகங்களை அநுபவிக்கும் பருவம். வசந்தத்தில் பெற்ற சுகங்களையெல்லாம் ஒளிவீசும் கதிராக்கி வயிற்றில் சுமந்து கொண்டிருந்த நேரம், கலைவானில் ஒளிவீசும் சூரியன் தனது கதிர்களைப் பரப்பி எம்மையெல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்தில் திணறடிக்கும் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது.

அந்தச் சூரியனைப் பார்த்துப் பிரமித்து பரவசப்பட்டு மகிழ்ந்து நான் எழுதிய பாராட்டுக் கவிதையின் முதலடிகளை இப்படித் தான் ஆரம்பித்தேன்.
"கீழ்வானைக் கிழித்து வரும் செங்கதிரோன் கதிரொன்று கலைவானில் ஒளிபரப்பும் திலகமாய் மாறிற்றோ!.....

விழுப்புரத்திற்கு மற்றெந்த ஊருக்கும் இல்லாத பெருமையும் தனிச் சிறப்பும் உண்டு.

விழுப்புரம் இரண்டு விடியல்ளைத் தந்தது. ஒன்று ஆன்மீகத்தின் விடியல், மற்றையது நடிப்பின் விடியல்! ஆம்! காஞ்சி மாமுனிவர் பரமாச்சாரியார் அவர்கள் ஆன்மீக உலகத்திற்கு ஈந்த ஊர் விழுப்புரம்! நமது நடிப்புச் சூரியனை இந்த மண்ணில் தவழவிட்டு நிமிர்ந்ததும் விழுப்புரம் தான்!

அந்தோ விதியின் விளையாட்டைப் பாருங்கள்! எங்கள் கலைச் சூரியன் கதிரொளி பரப்பிய நாளில் தானா கட்டபொம்மனாக உருமாறிக் கர்ஜசனை புரிந்த தமிழ்ச் சிங்கத்தின் தந்தை வெள்ளைக்கார நிர்வாகத்தினால் கைது செய்யப்பட வேண்டும்!


தந்தை முகம் காண்பதற்கு அவனுக்கு நாலரை ஆண்டுகள் பிடித்தன. ஆம்! பண்ருட்டி ரயில்வே தண்டவாளத்தில் வெடிகுண்டு வைத்த வழக்கில் அவனது மறக்குலத் தந்தையார் சின்னையா பிள்ளை சிறை சென்ற நாளே அவனது பிறந்த நாளாகி விட்டது!

தேச விடுதலைக்காக வெள்ளைக்காரனை எதிர்த்துச் சதிசெய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதியாகிப் போனதும் எமது நாயகனின் உள்ளத்தில் தேசிய உணர்வு கொழுந்து விட்டு எரியக் காரணமாகவும் - பின் அந்தப் புனித உணர்வே தேசியப் போராட்ட சுதந்திர வீரர்களின் பாத்திரங்களை ஏற்று நடிப்பதற்கும் உத்வேகம் தந்ததாகவும் அமைந்து விட்டது!

(தொடர்ச்சி 8ம் பக்கம்)


| கிரகப் பொருத்தம் பார்த்தல் | 3 | 4 | சாதகக் குறிப்பு கணித்தல் |
|---|---|---|---|
| ல | யோ கா சோ தி ட ம்  | (416) 299-8361 | 6 |
| 12 | | | எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல் |
| சுபமுகூர்த்தம் கணித்தல் | 10 | 9 | பலன் பார்த்தல் |

## குடும்ப பல்வைத்தியர்
## Family Dentist
**Dr. Mahin Pouyan**



உங்கள் முழுக் குடும்பத்திற்கும் பல் சம்பந்தமான சிகிச்சைகளிற்கு 18 வருட காலம் அனுபவமும், City of NorthYork Public Schools Board of Education ஆல் தெரிவு செய்யப்பட்ட பல் வைத்தியர் Dr. Mahin Pouyan ஐ நாடுங்கள்

☎: (416) 225-5522

* ஞாயிற்றுக் கிழமைகளிலும்

263 Finch Ave. E. (Finch & Bayview), North York, Ont. M2N 4S1

**பூச்சி / எலிகளை அழிக்க வேண்டுமா!!**

உங்கள் வீடுகளில் காணப்படும் பூச்சிகள், எலிகளை அழிக்க வேண்டுமா? உடன் தொடர்பு கொள்ளுங்கள்

(416) 750-1012 / (905) 839-2966 Car Phone: (416) 617-8717

## YASO DESIGNS

*Architectural & Engineering Services (15 Year Prof. Experience)*

*வீட்டின் பகுதியில். வியாபார ஸ்தாபனங்கள், ரெஸ்ரோறன்ற் போன்றவற்றை அமைப்பதற்கும், ஏதாவது மாற்றங்கள் செய்வதற்கும், படங்கள் வரைந்து அரசாங்க அனுமதி பெற்றுத் தருவதிலும், கட்டிடங்கள் திட்டமிடலும் இவைபோன்ற மற்ற சேவைகளிற்கும் தொடர்புகொள்ளுங்கள்*

யசோ - Tel: (416) 283-3841 Pager: 758-8671


*பெண்கள் கவனத்துக்கு,*

## மார்பகப்புற்று நோய்ப் பரிசோதனைகள் நீங்கள் தெரிந்திருக்க வேண்டிய உண்மைகள்

அண்மைக் காலங்களில் வட அமெரிக்காவில் மார்பகப் புற்று நோயினால் பாதிக்கப்படும் பெண்கள் தொகை அதிகரித்து வருகிறது. கனடாவில் ஒன்பது பெண்களில் ஒருவருக்கு என்ற விகிதத்தில் இப்புற்று நோய் பிடிக்கின்றது. பெண்களைப் பாதிக்கும் புற்று நோய்களில் இவ்வகை நோய் முதன்மை வகிக்கின்றது.

பெண்கள் வயது அதிகரிக்கும் போது இந்நோய்க்கு ஆளாகும் சந்தர்ப்பமும் அதிகரிக்கின்றது. இவ்விடயம் அனைத்துப் பெண்களின் கவனத்தையும் பெற வேண்டியிருப்பதுடன் 50 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தம்மைப் பரிசீலனை செய்து மார்பகப் புற்று நோயின் அறிகுறிகளை முன்கூட்டியே கண்டுபிடிப்பது முக்கியம் என்று நினைவூட்ட விரும்புகின்றோம். ஆரம்பத்திலேயே இதனைக் கண்டு பிடிப்பது உயிர்களைக் காக்கும். மார்பகங்கள் அகற்றப்பட வேண்டியதைத் தவிர்க்கும்.

50 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு மார்பகப் பரிசோதனைகளை இலவசமாக வழங்கும் திட்டமொன்று ஒன்ராரியோ மாநிலத்தில் இலவசமாகச் செயல்பட்டு வருகின்றது. ஒன்ராரியோ மாநில சுகாதார அமைச்சின் நிதியுதவியுடன் ஒன்ராரியோ புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மன்றம் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பிராந்தியப் புற்று நோய் மைய நிலையங்கள், பிரின்சஸ் மார்கரட் வைத்தியசாலை, போன்றவற்றினால் இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்நிலையங்கள் அதி விசேட மார்பகப் புற்று நோய் பரிசோதனைகளை மேற்கொள்கின்றன.

இப்பரிசோதனைத் திட்டங்களில் பங்கு பெறுவதனால் 50 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மார்பகப் புற்று நோயினால் மரணமடையும் விகிதம் 30 சதவீதத்தினால் குறைகின்றது என்பதை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. இத்திட்டத்தின் கீழ் "மமோகிராம்" எனப்படும் நுண்கதிர்ப்படமொன்று எடுக்கப்படுகின்றது. பயிற்றப்பட்ட தாதி மார்பகங்களைப் பரிசீலிப்பார். அத்துடன் ஒவ்வொருவரும் தமக்குத் தாமே மார்பகங்களைப் பரிசோதிக்கும் முறையும் பயிற்றப்படுகிறது. பரிசோதனைப் பெறுபேறுகள் பங்குபற்றியவருக்கும் குடும்ப வைத்தியருக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்படுகின்றது. இரண்டாண்டுகளுக்கொருமுறை இப்பரிசோதனைகளுக்குச் செல்லும்படி தொடர்ந்த ஞாபகப்படுத்தும் ஏற்பாடுகளும் இத்திட்டத்தில் உண்டு.

